# பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்வதற்குப் பரிந்துரைக்கப்பட்ட வேலைத்திட்டம்

# கணிதம்

## தரம் ஐந்து (இரண்டாம் தவணை)

2022

முன்பிள்ளைப் பருவவிருத்தி மற்றும் ஆரம்பக் கல்வித்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம

**நாட்டின் இடர் சூழ்நிலைக் காரணமாக பாடசாலை மாணவர்களுக்கு கிடைக்கப்பெறாத பாடசாலை நாட்களின் பாடத்திட்டத்தினை நிறைவு செய்து கொள்வதற்குரிய அறிவுறுத்தல் திட்டம்.**

நாட்டின் சமூக பொருளாதார இடர் சூழ்நிலை காரணங்களால் 2022ஆம் ஆண்டுக்கான தரம் 01 தொடக்கம் தரம் 05 வரை ஆரம்பப்பிரிவு கல்விப் பிரிவில் கற்கும் மாணவர்களை கருத்திற் கொள்ளும் போது இவர்கள் கல்வி கற்கும் காலத்தை இழந்துள்ளார்கள் என்பது தகவல் பகுப்பாய்வு மதிப்பீடுகள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு மாணவர்கள் இழந்துள்ள கற்றலுக்குரிய காலவேளைகளின் அடிப்படையினை நோக்காகக் கொண்டு அக் கல்வி ஆண்டுக்கான அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகளை அதனடிப்படையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ள எதிர்பார்க்கப்படுகின்றது.

அதனடிப்படையில் ஆரம்பக் கல்விப் பிரிவின் 1 – 5 வரையான தரங்களுக்கு இரண்டாம் தவணைக்கான கற்பித்தல் உள்ளடக்கங்களின் அத்தியவசியமான பகுதிகள் முன்வைக்கப்படுகின்றன. இவ்வத்தியவசியமான பகுதிகள் நிறைவேற்றப்படும் போது இரண்டாம் தவணைக்குரிய கற்றல் சந்தர்ப்பங்களை பெற்றுக் கொடுக்க இலகுவாக அமையும் என்பதை மேலும் தெரிவித்துக் கொள்ளலாம்.

எவ்வாறாயினும் நாம் முன்வைக்கும் கருத்து யாதெனில் இரண்டாம் தவணைக்குரிய மிகவும் அத்தியவசியமான பாடப்பரப்புக்கள் மாணவர்களுக்கு பெற்றுக் கொடுத்திருப்பின் அவற்றை விடுவித்து அவசியமான தேவையான பாடப்பரப்பில் இருந்து ஆரம்பிக்கலாம்.

ஒவ்வொரு பாடப்பரப்புக்கள் சம்பந்தமாக தேவையான கால அட்டவணையில் மாணவர்கள் எண்ணிக்கைக்கு ஏற்ப சுகமான முறையில் மாற்றங்கள் ஏற்படுத்திக்கொள்ள சுதந்திரண்டு மாற்றங்களை ஏற்படுத்தி வாய்ப்பு தரப்பட்டிருப்பினும் பாடப்பரப்புகளை நிறைவு செய்வதற்குரிய பொறுப்பு ஆசிரியர்களாகிய உங்களையே சாரும்.

ஒவ்வொரு பாத்திற்குமான பொது ஆசிரியர் வழிகாட்டியின் படி அத்தியவசியமானது என குறிக்கப்பட்ட பாடப்பகுதிகள் மாத்திரம் இங்கு உள்ளடக்கப்பட்டிருக்கின்ற தருவாயில் அத் தவணைக்குரியவைகளை பாடப்பரப்பில் அத்தியவசியமான செயற்பாடுகள் மிகவும் இலகுவான முறையில் தெளிவு படுத்தப்பட்டு பின் வீட்டிலிருந்து கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுத்த உங்களால் முடியுமாயிருத்தல் வேண்டும்.

தெளிவு படுத்தப்பட்ட செயற்பாடுகள் வீட்டியல் இருந்து செய்வித்தலில் மாணவர்களை எந்த விதத்திலும் இடர் நிலைக்கும் தள்ளப்படக்கூடாது என்பதனையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

எவ்வாறாயினும் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் சுமூகம், பாதுகாப்பு, மகிழ்ச்சி இவற்றுடன் மாணவர்களை ஒன்றிணையுங்கள்.
அதன்படி இலங்கை வாழ் ஆரம்பப் பிரிவில் கற்கும் மாணவச் செல்வங்களின் கற்றல் நடவடிக்கைகளை உறுதியுடன் பலனை பெற்றுக்கொள்ளும் நோக்கில் இவை அனைத்தயையும் நிறைவு செய்ய எம் அனைவருக்கும் இறைவனின் ஆசியும் அருளும் கிடைக்க பிராத்திப்போம்

தரம் 5 - கணிதம்

| அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | விடய உள்ளடக்கம் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| அலகுடன் கூடிய அளவீடுகளை கணிப்பார். | 1. கனவளவு, கொள்ளளவு அடங்கிய எளியப் பிரசினங்கள் தீர்ப்பார். | • லீற்றர், மில்லி லீற்றர் பயன்படுத்தி பாத்திரம் கொள்ளும் திரவ அளவை அனுமானிப்பார், அளந்து ஒப்பிடுவார்.<br>• லீற்றர், மில்லி லீற்றர் அடங்கிய எளிய கூட்டல் பிரசினங்களை தீர்ப்பார். | • பாத்திரங்களின் கொள்ளளவை அனுமானித்தம் அளந்து ஒப்பிடலும்.<br>• கனவளவு, கொள்ளளவு சார்ந்த எளியப் பிரசினங்கள் தீர்த்தல். | அலகு 12: செயற்பாடு 01 - 05 | 73 - 79 | 03 மணி |
| குறிப்பிட்ட நிறையை அனுமானித்து அதன் நிறையை உறுதிப்படுத்துவார். | 2. நிறையை அளத்தல் சார்ந்த பிரசினங்களைத் தீர்ப்பார். | • பொருளொன்றின் நிறையைக் கிட்டிய கிலோகிராமில் அனுமானிப்பார், அளந்து ஒப்பிடுவார்.<br>• நிறையை அளப்பதற்காக வெவ்வேறு வகையான தரவுகளை பயன்படுத்துவதை இனங்கண்டு கூறுவார்.<br>• கிராம் கிலோகிராம் அகுகள் அடங்கிய, கொண்டுருதலுடன் கூடிய எளிய கூட்டல் பிரசினங்கள் தீர்ப்பார். | • பொருள்களின் நிறையை அனுமானித்தலும் கிலோகிராம் பயன்படுத்தி அளத்தலும் ஒப்பிடுதலும்.<br>• நிறையை அளக்கும் உபகரணங்களை இனங்காணல்.<br>• பொருள்களின் நிறை சார்ந்த எளிய பிரசினங்களை தீர்ப்பார். | அலகு 13: செயற்பாடு 01 - 04 | 80 - 85 | 03 மணி |

| அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | விடய உள்ளடக்கம் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | 3. அடிப்படைக் கணிதச் செய்கைகள் தொடர்பான எளிய பிரசினங்களைத் தீர்ப்பார். | • நான்கிலக்கம் வரையிலான எண்களை கூட்டல், கழித்தல் அடங்கிய எளிய பிரசினங்கள் தீர்ப்பார். | • எண் கூட்டல் மற்றும் எண் கழித்தல் அடங்கிய எளிய பிரசினங்களை தீர்-த்தல். | அலகு 14: செயற்பாடு 01 - 03 | 86 - 88 | 03 மணி |
| | 4. திண்மங்கள் மற்றும் கேத்திரகணித தள வடிவங்களின் இயல்புகளையும் தன்மைகளையும் இனங்கண்டு செயற்பாடுகளில் ஈடுபடுவார். | • சதுரமுகி, கனவுரு, நான்முகி, உருளை ஆகிய திண்மங்க-ளின் இயல்புகளை கூறுவார்.<br>• இரு பரிமான வடிவங்களைக் கொண்டு சதுரமுகி, கனவுரு, நான்முகி, உருளை ஆகியவற்றை ஆக்குவார்.<br>• கிடைத்தளம் நிலைக்குத்துத்-தளம் ஆகியவற்றை இனங்கண்டு குறிப்பிடுவார். | • கேத்திரகணித திண்மங்கள் ஆக்குதலும் அவற்றின் இயல்புகளை இனங்காணலும்.<br>• நிலைக்குத்துத் தளங்களையும் கிடைத்-தளங்களையும் இனங்காணல். | அலகு 15: செயற்பாடு 01 - 05 | 89 - 97 | 03 மணி |

| அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | விடய உள்ளடக்கம் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| தரவுகளுக்கேற்ப நிரல் வரைபை வரைவார். | 5. தரவுகளை நிரல் வரைபு மூலம் வகைக் குறிப்பார். வகைக் குறித்த தகவல்களை வாசிப்பார். | • தரவு சேகரித்து நிரல் வரைபு மூலம் வகைக் குறிப்பார்.<br>• நிரல் வரைபு மூலம் காட்டப்படும் தகவல்களை விபரிப்பார்.<br>• பொருத்தமானவாறு அளவுத்திட்டத்தை மாற்றி நிரல் வரைபு மூலம் வகைக்குறித்து, அவ்வாறு வகைக் குறித்த தகவல்களை வாசிப்பார். | • வகைகுறித்த தகவல்களை வாசித்தல். | அலகு 16: செயற்பாடு 01 - 03 | 9 - 103 | 03 மணி |
| | 6. பத்தின் பங்குகளை தசம எண்களாக இனங்கண்டு பயன்படுத்துவார். | • பத்தின் பங்குகளை தசம எண்களாகக் காட்டுவார்.<br>• ஒரு தசமதானம் கொண்ட தசம எண்களைப் பத்தின் பங்குகளாகக் காட்டுவார். | • பத்தின் பங்குகளை தசம எண்களாக இனங்கண்டு பயன்படுத்துதல். | அலகு 17: செயற்பாடு 01 - 02 | 104 - 107 | 02 மணி |

| அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | விடய உள்ளடக்கம் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | 7. மீற்றர் சென்றிமீற்றர் கொண்ட கணித்தல் அடங்கிய எளிய பிரசினங்களை தீர்ப்பார். | • மீற்றர் சென்றிமீற்றர் அடங்கிய எளிய கூட்டல் மற்றும் கழித்தல் பிரசினங்களைத் தீர்ப்பார்.<br>• மீற்றர் சென்றிமீற்றர் அடங்கிய எளிய பெருக்கல் பிரசினங்களைத் தீர்ப்பார். | • எளிய பிரசினங்களை தீர்த்தல். | அலகு 18: செயற்பாடு 01 - 02 | 108 - 111 | 03 மணி |
| | 8. சிட்டைகள் தயாரிப்பார். | • பெருக்கல் வகுத்தல் அடடங்கிய பணம் சார்ந்த கணித்தல்கள் செய்வார்.<br>• எளிய கொடுக்கல், வாங்குதலுக்காகச் சிட்டைகள் தயாரிப்பார்.<br>• கிலோமீற்றர், மீற்றர் அடங்கிய எளிய கூட்டல் மற்றும் கழித்தல் பிரசினங்கள் தீர்ப்பார். | • சிட்டைகள் சார்ந்த பிரசினங்களை தீர்த்தல். | அலகு 19: செயற்பாடு 01 - 02 | 113 - 117 | 03 மணி |

| அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | விடய உள்ளடக்கம் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | 9. மூவிலக்கத்திற்கு மேமற்படாத எண்களை 6 இனாலும் 7 இனாலும் பெருக்கல் பிரசினங்கள் தீர்ப்பார். | • 6 ஆம் 7 ஆம் பெருக்கல் வாய்ப்பாடுகளைக் கட்டியெழுப்புவார் மனனமாகக் கூறுவார்.<br>• ஈரிலக்கத்திற்கு மேற்படாத யாதேனும் எண்ணை 6 இனால் பெருக்கி விடையைக் கூறுவார்.<br>• மூவிலக்கத்திற்கு மேமற்படாத எண்களை 6 இனாலும் 7 இனாலும் பெருக்குவார். | • 6 இனாலும் 7 இனாலும் பெருக்குதல். | அலகு 20: செயற்பாடு 01 - 05 | 118 - 123 | 05 மணி |

| அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | விடய உள்ளடக்கம் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| கால எல்லைப் பற்றிய மனக்கணிதப் பிரசினங்களை தீர்ப்பார். | 10. நேரம் கழிதல் தொடர்பான கணித்தல்களைக் கொண்ட பிரசினங்களை தீர்ப்பார். | • யாதேனுமொரு வேலையை ஆரம்பித்த நேரத்திற்கும் செய்து முடித்த நேரத்திற்கும் அமைய அவ்வேலைக்குச் செலவாகிய நேர அளவைக் கூறுவார்.<br>• வேலையை ஆரம்பித்த நேரத்திற்கும் செவாகிய நேரத்திற்கும் அமைய அவ்வேலையை முடித்த நேரத்தைக் கூறுவார்.<br>• யாதேனும் வேலைக்கு செலவாகிய நேரம் அவ்வேலை முடிந்த நேரம் ஆகியவற்றுக்கு அமைய வேலை ஆரம்பித்த நேரத்தைக் கூறுவார். | • காலம் தொடர்பான கணித்தல்கள் அடங்கிய பிரசினங்கள் தீர்த்தல். | அலகு 21: செயற்பாடு 01 - 03 | 124 - 129 | 03 மணி |

| அத்தியவசியக் கற்றல் தேர்ச்சிகள் | தேர்ச்சிகள் | கற்றற்பேறுகள் | விடய உள்ளடக்கம் | செயற்பாடு | ஆசிரிய வ.கா. பக்க இல | காலம் |
|---|---|---|---|---|---|---|
| | 11. மூவிலக்கம் வரையிலான எண்களை 6 இனாலும் 7 இனாலும் வகுக்கும் எளிய பிரசினங்களைள தீர்ப்பார். | • மூவிலக்கம் வரையிலான எண்ணொன்றினை 6 இனால் வகுத்து கிடைக்கும் விடையைக் கூறுவார்.<br>• மூவிலக்கம் வரையிலான எண்ணொன்றினை 6 இனால் வகுக்கும் எளிய பிரசினங்களைத் தீர்ப்பார்.<br>• மூவிலக்கம் வரையிலான எண்ணொன்றினை 7 இனால் வகுத்து கிடைக்கும் விடையைக் கூறுவார்.<br>• மூவிலக்கம் வரையிலான எண்ணொன்றினை 7 இனால் வகுக்கும் எளிய பிரசினங்களைத் தீர்ப்பார். | • 6 இனாலும் 7 இனாலும் வகுத்-தல்.<br>• எளிய பிரசின-ங்களை தீர்த்தல். | அலகு 22: செயற்பாடு 01 - 04 | 130 - 133 | 05 மணி |
| | | | | | மொத்த நேரம் | 36 மணி |